In association with

# கொரோனா வைரஸ் (கோவிட் -19) தடுப்பூசி

## இங்கிலாந்து, ஸ்காட்லாந்து மற்றும் வேல்ஸ்

கொரோனா வைரஸ் (கோவிட்-19) தடுப்பூசிகள் பாதுகாப்பானவை மற்றும் செயல்திறனுள்ளவை. கொரோனா வைரஸுக்கு எதிரான தலைசிறந்த பாதுகாப்பை இவை உங்களுக்கு வழங்குகின்றன.

பதிப்பு 1 (03.03.2021 அன்று புதுப்பிக்கப்பட்டது)

தமிழ் | TAMIL

»

# பொருளடக்கம்

கோவிட் -19 தடுப்பூசியை யார் பெற முடியும்? 2
கோவிட் -19 தடுப்பூசி எவ்வாறு கொடுக்கப்படுகிறது? 4
கோவிட் -19 தடுப்பூசியை எவ்வாறு பெறுவது? 4
கோவிட் -19 தடுப்பூசிகள் எந்தளவு பாதுகாப்பானவை? 7
கோவிட் -19 தடுப்பூசி எந்தளவு செயல்திறன் வாய்ந்தவை? 8
கோவிட் -19 தடுப்பூசிகளின் பக்க விளைவுகள் 8
கோவிட் -19 தடுப்பூசியின் மூலப்பொருட்கள் 9
மேலும் தகவல் 9

## கோவிட் -19 தடுப்பூசியை யார் பெற முடியும்?

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து மற்றும் வேல்ஸில் உள்ள அனைத்து பெரியவர்களுக்கும், அவர்களது குடியேற்ற நிலையைப் பொருட்படுத்தாமல், என்.எச்.எஸ். வழங்குகின்ற கோவிட்-19 தடுப்பூசிகள் இலவசமாகக் கிடைக்கும். பொது நிதி பெற வழியில்லாத நபர்களும் (என்.ஆர்.பி.எ்.ப்) இதில் சேர்க்கப்பட்டுள்ளனர். கொரோனா வைரஸால் பாதிக்கப்படும் அதிக ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு என்.எச்.எஸ். தற்போது கோவிட்-19 தடுப்பூசியை வழங்கி வருகிறது.

தடுப்பூசிகள் சில மருந்தகங்களிலும், ஜி.பி-க்கள் நடத்தும் உள்ளூர் தடுப்பூசி மையங்களிலும், மற்றும் பெரிய தடுப்பூசி மையங்களிலும் வழங்கப்படுகின்றன.

என்.எச்.எஸ். மருத்துவ ஆபத்துக்கு ஏற்ப மக்களுக்கு தடுப்பூசிகளை போடுகின்றனர், பெரும்பாலும் இதற்கு அடிப்படையாக மருத்துவ நிலைமைகள் மற்றும் வயது குழுவில் முதியவர்கள் முதல் இளம் வயதினர் வரை. மற்றவர்களை விட சிலர் மட்டுமே கோவிட்-19 ஆல் கடுமையான சிக்கல்களுக்கு ஆளாகக்கூடிய அதிக ஆபத்தில் உள்ளனர்.

.இது பின்வருபவர்களுக்கு வழங்கப்படுகிறது:

- 55 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்
- கொரோனா வைரஸ் காரணமாக அதிக ஆபத்தில் உள்ளவர்கள் (நீண்ட கால உடல்நல நிலைமைகள் உள்ளவர்கள்)
- தற்போதுள்ள மருத்துவ பிரச்சினைகள் (சிஓபிடி, ஆஸ்துமா, இதய பிரச்சினைகள், சிறுநீரகம் அல்லது கல்லீரல் நோய், நீரிழிவு நோய் மற்றும் பிற நீண்டகால உடல்நல பிரச்சினைகள் போன்றவை) காரணமாக கொரோனா வைரஸால் ஏற்படும் சிக்கல்களுக்கு ஆளாகக்கூடிய அதிக ஆபத்து உள்ளவர்கள்
- பராமரிப்பு இல்லங்களில் வசிக்கும் அல்லது வேலை செய்யும் நபர்கள்
- சுகாதார மற்றும் சமூக பராமரிப்பு தொழிலாளர்கள்
- கற்றல் இயலாமைகள் உள்ளவர்கள்
- பராமரிப்பாளர் கொடுப்பனவுக்கு தகுதியான நபர்கள்

ஜூலை மாத இறுதிக்குள் அனைத்து வயதுவந்தோர்களுக்கும் தடுப்பூசியின் முதல் டோஸை வழங்குவதை இங்கிலாந்து அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

இங்கிலாந்து: வயதானவர்களுக்கான கோவிட்-19 தடுப்பூசி குறித்த சமீபத்திய தகவல்களைப் படிக்கவும்

ஸ்காட்லாந்து: வயது வந்தோர்களுக்கான கோவிட்-19 தடுப்பூசி குறித்த சமீபத்திய தகவல்களைப் படிக்கவும்

வேல்ஸ்: கோவிட்19 தடுப்பூசி குறித்த சமீபத்திய தகவல்களைப் படிக்கவும்

## நீங்கள் இன்னும் தகுதி பெறவில்லை என்றால்

உங்களை தொடர்பு கொள்ளும்வரை காத்திருங்கள். தடுப்பூசி பெற உங்கள் முறை வரும்போது என்.எச்.எஸ். உங்களுக்குத் தெரிவிக்கும்.

இங்கிலாந்து: கோவிட்-19 தடுப்பூசி தகுதி மற்றும் தடுப்பூசி சப்ளைகள் பற்றிய சமீபத்திய தகவல்களைப் படிக்கவும்

## தடுப்பூசி அனைவருக்கும் பொருத்தமானதா?

நீங்கள் கர்ப்பமாக இருந்தால் கோவிட்-19 தடுப்பூசி பாதுகாப்பற்றது என்பதற்கு எந்த சான்றும் இல்லை. உங்களுக்கு வழக்கமாக அதை வழங்குவதற்கு முன் கூடுதல் சான்றுகள் தேவை.

தடுப்பூசி மற்றும் நோய்த்தடுப்புக்கான கூட்டுக் குழு அதன் ஆலோசனையை இவ்வாறு புதுப்பித்துள்ளது, நீங்கள் கர்ப்பமாக இருந்தால் பின்வரும் நிலைகளில் தடுப்பூசி பெறுவதை கருதுமாறு பரிந்துரைக்கிறோம்:

- நீங்கள் பணிபுரியும் இடத்தின் காரணமாக கொரோனா வைரஸ் வருவதற்கான அதிக ஆபத்து உள்ளது
- ஒரு உடல்நல நிலை காரணமாக நீங்கள் கொரோனா வைரஸின் கடுமையான சிக்கல்களுக்கு ஆளாக்கூடிய அதிக ஆபத்தில் உள்ளீர்கள்

தடுப்பூசிக்குப் பிறகு நீங்கள் கர்ப்பத்தைத் தவிர்க்க தேவையில்லை. தடுப்பூசிகளில் எந்த உயிருடன் உள்ள வைரஸும் இல்லை, அதனால் உங்களுக்கோ அல்லது உங்கள் குழந்தைக்கோ கோவிட்-19-ஐ தரமுடியாது. கோவிட் -19 தடுப்பூசிகள் கருவுறுதலை பாதிக்கும் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

நீங்கள் தாய்ப்பால் தரும் சமயத்திலும் கோவிட்-19 தடுப்பூசியை பெறலாம். தடுப்பூசியை பெறுவதற்கு முன்பு நீங்கள் ஒரு சுகாதார நிபுணரிடம் பேசுங்கள். அவர்கள் நன்மைகள் மற்றும் அபாயங்கள் பற்றி உங்களுடன் விவாதிப்பார்கள்.

இங்கிலாந்து: நீங்கள் கர்ப்பமாக இருந்தால், கர்ப்பமாகலாம் அல்லது தாய்ப்பால் தரும் சமயத்திலும், சமீபத்திய கோவிட்-19 தடுப்பூசி ஆலோசனையைப் படிக்கவும்

ஸ்காட்லாந்து: நீங்கள் கர்ப்பமாக இருந்தால், கர்ப்பமாகலாம் அல்லது தாய்ப்பால் தரும் சமயத்திலும், சமீபத்திய கோவிட்-19 தடுப்பூசி ஆலோசனையைப் படிக்கவும்

வேல்ஸ்: நீங்கள் கர்ப்பமாக இருந்தால், கர்ப்பமாகலாம் அல்லது தாய்ப்பால் தரும் சமயத்திலும், சமீபத்திய கோவிட்-19 தடுப்பூசி ஆலோசனையைப் படிக்கவும்

அதே தடுப்பூசியின் முந்தைய டோஸ் அல்லது தடுப்பூசியில் உள்ள எந்தவொரு பொருட்களுக்கும் நீங்கள் எப்போதாவது கடுமையான ஒவ்வாமை எதிர்வினையை (அனாபிலாக்ஸிஸ் உட்பட) அனுபவித்திருந்திருந்தால் நீங்கள் கோவிட்-19 தடுப்பூசியை பெறக்கூடாது.

நோயெதிர்ப்பு தடுப்பு மற்றும் எச்.ஐ.வி தொற்று உள்ளவர்களுக்கு (சி.டி4 எண்ணிக்கையைப் கருதாமல்) தடுப்பூசியை தரவேண்டும்.

இரத்த உறைவு அல்லது இரத்தப்போக்கு கோளாறுகள் உள்ளவர்களும் தடுப்பூசியைப் பெறலாம், ஆனால் சிகிச்சையின் போது சரியான நேரத்தில் இது வழங்கப்படுவதை உறுதிசெய்ய அவர்களது பராமரிப்பு வழங்குநருடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

## கோவிட் -19 தடுப்பூசி எவ்வாறு கொடுக்கப்படுகிறது?

அனைத்து கோவிட்-19 தடுப்பூசிகளும் உங்கள் கையின் மேல்புறத்தில் ஊசி மூலம் போடப்படுகின்றன. அவை இரண்டு டோஸ்களாக வழங்கப்படுகின்றன. முதல் டோஸ் எடுத்த பிறகு மூன்று முதல் 12 வாரங்களில் உங்களுக்கு இரண்டாவது டோஸ் கிடைக்கும்.

நீங்கள் முதல் தடுப்பூசியைப் பெறும்போது, அதில் உள்ள தடுப்பூசி விவரங்களுடன் ஒரு சிறிய அட்டை உங்களுக்கு வழங்கப்படும். இந்த அட்டையை நீங்கள் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். உங்கள் இரண்டாவது தடுப்பூசி டோஸை வேறு தடுப்பூசி மையத்தில் பெற வேண்டுமானால், நீங்கள் சரியான வகை தடுப்பூசியைப் பெறுவதை இந்த அட்டை உறுதி செய்யும்.

## கோவிட் -19 தடுப்பூசியை எவ்வாறு பெறுவது?

குடியேற்ற நிலையைப் பொருட்படுத்தாமல், என்.எச்.எஸ். வழங்கும் கோவிட்-19 தடுப்பூசிகள் இங்கிலாந்தில் உள்ள அனைத்து வயதுவந்தோர்களுக்கும் இலவசமாகக் கிடைக்கும்.

நீங்கள் ஒரு பொது மருத்துவரிடம் (ஜி.பி.) பதிவு செய்திருந்தால் தடுப்பூசி பெறுவது எளிது. இது நீங்கள் ஒரு என்.எச்.எஸ் எண்ணை வைத்திருப்பதை உறுதி செய்யும், மேலும் நீங்கள் தகுதி பெறும்போது தடுப்பூசி சந்திப்பிற்காக பதிவு செய்யலாம் (வயது அல்லது மருத்துவ நிலையின் அடிப்படையில்). ஜி.பியிடம் பதிவு செய்துவிட்டால், நீங்கள் மற்ற சுகாதார மற்றும் பராமரிப்பு சேவைகளையும் அணுகலாம் என்று அர்த்தம்.

ஜி.பி. ஒரு குடும்ப மருத்துவர் ஆவார். இங்கிலாந்து, ஸ்காட்லாந்து மற்றும் வேல்ஸில், குடியேற்ற நிலையைப் பொருட்படுத்தாமல், அனைவரும் ஒரு ஜி.பி.யிடம் பதிவுசெய்து முதன்மை பராமரிப்பு சேவைகளை இலவசமாகப் பெறலாம்.

நீங்கள் தற்போது ஒரு ஜி.பியிடம் பதிவு செய்யப்படவில்லை என்றால், நீங்கள் இன்னும் தடுப்பூசிக்கு தகுதியற்றவராக இருந்தாலும் கூட, நீங்கள் ஒரு உள்ளூர் ஜி.பியை தேடி இப்போது பதிவு செய்ய வேண்டும். இங்கிலாந்து, ஸ்காட்லாந்து மற்றும் வேல்ஸ் -ககான என்.எச்.எஸ் வலைத்தளத்தைப் பயன்படுத்தி நீங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள ஜி.பி.யை தேடிக்கலாம் அல்லது உங்கள் உள்ளூர் ஜி.பியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நோயாளியாக பதிவு செய்யுமாறு கேட்கலாம்.

ஜி.பி. அலுவலகங்களால் தங்கள் உள்ளூர் பகுதியில் வசிக்கும் மக்களை மட்டுமே பதிவு செய்ய முடியும். நீங்கள் ஜி.பி. அலுவலகத்தின் எல்லைக்கு வெளியே வசித்தால், நீங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள மற்றொரு ஜி.பி.யில் பதிவு செய்ய வேண்டும்.

ஜி.பி-இல் பதிவு செய்ய நீங்கள் ஒரு படிவத்தை நிரப்ப வேண்டும். ஜி.பி. அலுவலக வலைத்தளத்தில் நீங்கள் ஆன்லைனில் பதிவு செய்ய முடியுமா என்று பார்க்கலாம். நிரந்தர நோயாளியாக(ஒரு தற்காலிக நோயாளியாக அல்ல) பதிவு செய்யுமாறு நீங்கள் கேட்க வேண்டும். தேவைப்பட்டால், படிவத்தை பூர்த்தி செய்ய ஜி.பி. அலுவலகத்திடம் நீங்கள் உதவி கேட்கலாம்.

## ஜி.பியில் பதிவு செய்ய எனக்கு ஆவணங்கள் தேவையா?

சில அலுவலகங்கள் பதிவுசெய்ய முகவரி சான்று, அடையாளச் சான்று அல்லது குடியேற்ற நிலைக்கான சான்று அல்லது ஒரு என்.எச்.எஸ் எண் போன்ற ஆவணங்களை வழங்குமாறு உங்களிடம் கேட்கலாம், ஆனால் அவற்றை வழங்க முடியாவிட்டாலும் அவர்கள் உங்களை பதிவு செய்ய மறுக்கக்கூடாது.

இந்த ஆவணங்களை உங்களால் வழங்க முடியாவிட்டால், உங்களிடம் இந்த ஆவணங்கள் இல்லை என்பதையும், ஆனால் நீங்கள் அவர்களது சிகிச்சை எல்லைக்குள் வாழ்வதையும், மற்றும் நோயாளியாக GP உடன் பதிவு செய்ய விரும்புவதையும் நீங்கள் சொல்ல வேண்டும்.

ஜி.பியில் பதிவு செய்யும்போது சிக்கல்களை சந்தித்தால், பின்வரும் ஆதாரங்கள் உங்களுக்கு உதவக்கூடும். நீங்கள் ஆன்லைனில் பதிவு செய்யும்போது ஆவணங்கள் கேட்கப்பட்டால், ஜி.பி. அலுவலகத்திற்கு ஆதாரங்களை மின்னஞ்சல் செய்யலாம்:

- என்.எச்.எஸ். இங்கிலாந்து இங்கிலாந்தில் ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு ஒரு ஜி.பியில் பதிவு செய்ய உதவ மஞ்சள் அட்டைகளை தயாரித்துள்ளது. நீங்கள் பதிவு செய்யச் செல்லும்போது கார்டை ஜி.பி. வரவேற்பாளரிடம் காட்டலாம். உள்ளூர் தொண்டு நிறுவனங்கள், உணவு வங்கிகள், உங்கள் உள்ளூர் ஹெல்த்வாட்ச் அல்லது உலக மருத்துவர்களிடமிருந்து நீங்கள் மஞ்சள் அட்டையைப் பெறலாம்.
- ஸ்காட்லாந்து அரசு ஸ்காட்லாந்தில் உள்ள ஜி.பி.க்களுக்கு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது: “ஜி.பியில் பதிவு செய்ய எந்த ஆவணங்களும் தேவையில்லை. ஒரு நோயாளியின் அடையாளத்தை அல்லது ஆதாரத்தை வழங்க ஒரு நோயாளியின் இயலாமை ஒரு நோயாளியை பதிவு செய்வதை மறுக்க அல்லது தாமதப்படுத்த நியாயமான காரணங்களாக கருதப்படவில்லை.”
- பிரிட்டிஷ் மருத்துவ சங்கத்தின் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்தில் உள்ள மருத்துவர்களுக்கான வழிகாட்டுதல் கூறுகிறது, “ஒரு நோயாளியால் அடையாள

ஆவணங்களை வழங்க முடியாதது, அவர்களை பதிவு செய்ய மறுப்பதற்கு நியாயமான காரணமாகாது".

ஒரு ஜிபி பிராக்டீஸ் உங்களை பதிவு செய்ய மறுத்துவிட்டால், இங்கிலாந்தில் உள்ள நோயாளிகள் 0300 311 2233 என்ற எண்ணில் அழைக்கலாம். ஸ்காட்லாந்து மற்றும் வேல்ஸில் உள்ள நோயாளிகள் உங்கள் உள்ளூர் சுகாதார வாரியத்தை தொடர்பு கொள்ள வேண்டும். ஜி.பி.யில் பதிவு செய்ய உதவுவதற்காக நோயாளிகள் உலக மருத்துவர்களை 0808 1647 686 (இலவச தொலைபேசி எண்) என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

## நீங்கள் வீடற்றவராக இருந்தால்

நிலையான முகவரி இல்லையென்றாலும் ஜி.பியிடம் நீங்கள் பதிவு செய்து கொள்ளலாம். உங்களிடம் ஒரு நிலையான முகவரி இல்லை, ஆனால் நீங்கள் உள்ளூர் பகுதியில் தங்கியிருக்கிறீர்கள், மற்றும் நோயாளியாக பதிவு செய்ய விரும்புகிறீர்கள் என்பதை ஜி.பி. பிராக்டீஸிடம் நீங்கள் விளக்க வேண்டும். நீங்கள் ஒரு தற்காலிக முகவரியைப் பயன்படுத்தலாம், இது நண்பரின் முகவரி அல்லது பகல்நேர மையமாக இருக்கலாம் அல்லது உங்களை முகவரி இல்லாமலும் பிராக்டீஸ் பதிவு செய்யலாம்.

தேவைப்பட்டால் (எடுத்துக்காட்டாக, சோதனை முடிவுகளுடன்) தொலைபேசி மூலம் உங்களைத் தொடர்புகொள்வதற்கான வழி ஜி.பியிடம் இருப்பதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

## நீங்கள் புகலிடம் கோருவோருக்கான தங்குமிடத்தில் தங்கியிருந்தால்

நீங்கள் உள்துறை அலுவலக தங்குமிடம் அல்லது தற்செயல் இடவசதி, அதாவது ஹோட்டல் போன்றவற்றில் தங்கியுள்ள புகலிடம் கோருபவராக இருந்தால், நீங்கள் ஒரு ஜி.பியிடம் பதிவு செய்யும்போது இந்த இடத்தின் முகவரியை தரவேண்டும் மற்றும் உள்துறை அலுவலகத்தால் வழங்கப்பட்ட தங்குமிடத்தில் இருப்பதால் முகவரி ஆவணங்களுக்கான சான்று உங்களிடம் இல்லையென்பதை விளக்கவேண்டும். ஒரு ஜி.பி. உங்களை பதிவு செய்ய மறுத்தால், நீங்கள் உங்கள் தங்குமிட வழங்குநரிடம் அல்லது புலம்பெயர்ந்தோர் உதவியிடம் 0808 8010 503 (இலவச தொலைபேசி எண்) என்ற எண்ணில் பேச வேண்டும்.

உள்துறை அலுவலகம் உங்களை புதிய தங்குமிடத்திற்கு நகர்த்தப் போவது உங்களுக்கு தெரிந்தால், நீங்கள் நகர்த்தப்படும் வரை கோவிட-19 தடுப்பூசியை எடுத்துக்கொள்வதை தாமதிக்கக்கூடாது. உங்கள் புதிய தங்குமிடத்திற்கு அருகிலுள்ள தடுப்பூசி மையத்தில் தடுப்பூசியின் இரண்டாவது டோஸை நீங்கள் பெறலாம்.

உங்கள் முதல் தடுப்பூசி சந்திப்பில் உங்களுக்கு வழங்கப்பட்ட சிறிய அட்டையை நீங்கள் கவனமாக வைத்துக்கொண்டு, அதை உங்கள் இரண்டாவது சந்திப்பு சமயத்தில் எடுத்துச் சென்றால் தான், நீங்கள் சரியான வகை தடுப்பூசியைப் பெறுவதை தடுப்பூசி மையத்தால் உறுதிசெய்ய முடியும்.

## தடுப்பூசி சந்திப்பிற்கான முன்பதிவு

### இங்கிலாந்து

பின்வருவனவற்றில் ஏதேனும் பொருந்தினால் உங்கள் தடுப்பூசி சந்திப்புகளை ஆன்லைனில் பதிவு செய்யலாம்::

- 55 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்
- கொரோனா வைரஸ் காரணமாக அதிக ஆபத்தில் உள்ளவர்கள் (நீண்ட கால உடல்நல நிலைமைகள் உள்ளவர்கள்)
- தற்போதுள்ள மருத்துவ பிரச்சினைகள் (சிஓபிடி, ஆஸ்துமா, இதய பிரச்சினைகள், சிறுநீரகம் அல்லது கல்லீரல் நோய், நீரிழிவு நோய் மற்றும் பிற நீண்டகால உடல்நல பிரச்சினைகள் போன்றவை) காரணமாக கொரோனா வைரஸால் ஏற்படும் சிக்கல்களுக்கு ஆளாக்கூடிய அதிக ஆபத்து உள்ளவர்கள்
- நீங்கள் ஒரு தகுதிவாய்ந்த முன்னணி சுகாதார பணியாளர்

- நீங்கள் ஒரு தகுதிவாய்ந்த முன்னணி சமூக பராமரிப்பு பணியாளர்
- கற்றல் இயலாமைகள் உள்ளவர்கள்
- பராமரிப்பாளர் கொடுப்பனவுக்கு தகுதியான நபர்கள்

நீங்கள் ஒரு பெரிய தடுப்பூசி மையத்தில் அல்லது கோவிட்-19 தடுப்பூசிகளை வழங்கும் மருந்தகத்தில் சந்திப்புகளுக்காக பதிவு செய்யலாம். என்.எச்.எஸ். தொடர்பு கொள்ளும்வரை நீங்கள் காத்திருக்க தேவையில்லை.

உங்கள் தடுப்பூசி சந்திப்புகளை ஆன்லைனில் பதிவு செய்யலாம்::

ஸ்காட்லாந்து

நீங்கள் சந்திப்பு விவரங்களுடன் அழைப்புக் கடிதம் அல்லது தொலைபேசி அழைப்பைப் பெறுவீர்கள். நீங்கள் சந்திப்பில் கலந்து கொள்ளும் பட்சத்தில், சந்திப்புக்குச் செல்வதை உறுதிப்படுத்த நீங்கள் எதுவும் செய்யத் தேவையில்லை. உங்களால் போக முடியாவிட்டால் உங்கள் சந்திப்பை நீங்கள் மறுதிட்டமிடலாம் அல்லது ரத்து செய்யலாம், இது உங்கள் சந்திப்பு நேரத்தை வேறு ஒருவருக்கு வழங்க உதவும்.

வேல்ஸ்

தடுப்பூசியைப் பெறுவதற்கான உங்கள் முறை வரும்போது, என்.எச்.எஸ். உங்களை நேரடியாக தொடர்பு கொள்ளும்.. தொலைபேசி அல்லது கடிதம் மூலம் உங்களை தொடர்பு கொள்ளலாம்.

## நான் தடுப்பூசி பெற்றால் என்னை பற்றி உள்துறை அலுவலகத்தில் அறிக்கை போகுமா?

குடியேற்ற நிலையைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் இலவசமாக உள்ள என்.எச்.எஸ். சேவையை நீங்கள் அணுகும்போது உங்கள் தகவல்கள் உள்துறை அலுவலக குடிவரவு துறையுடன் பகிரப்படாது. இவற்றில் ஜி.பி. சேவைகள் மற்றும் கோவிட்-19 சோதனை, சிகிச்சை மற்றும் தடுப்பூசி சேவைகள் ஆகியவை அடங்கும்.

ஜி.பியிடம் பதிவு செய்யும்போது அல்லது கோவிட்-19 தடுப்பூசி சந்திப்பை முன்பதிவு செய்யும் போது, குடியேற்ற நிலையை நிரூபிக்கும்படி உங்களிடம் கேட்கப்படக்கூடாது.

கொரோனா வைரஸிற்கான சோதனை, சிகிச்சை அல்லது தடுப்பூசியுடன் தொடர்பில்லாத சில என்.எச்.எஸ் மருத்துவமனை மற்றும் சமூக சேவைகள் வழக்கமான குடியேற்ற நிலை இல்லாதவர்களுக்கு இலவசமாக கிடைக்காது. இந்த சேவைகள் உங்களைப் பற்றிய பெயர், முகவரி மற்றும் பிறந்த தேதி போன்ற தகவல்களை உள்துறை அலுவலக குடிவரவு துறையுடன் பகிர்ந்து கொள்ளலாம். இது உங்கள் தற்போதைய குடியேற்ற நிலையை உறுதிப்படுத்த அல்லது செலுத்தப்படாத சுகாதார கட்டணங்களை பற்றி அறிக்கை அளிப்பதற்காக செய்யப்படுகிறது. உங்கள் உடல்நலம் குறித்த தகவல்கள் பகிரப்படாது.

தனிநபர்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ பாதுகாப்பு கவலை உள்ள சூழ்நிலைகளில், போலீஸ், நீதிமன்றங்கள் மற்றும் அரசாங்கத் துறைகளுடன் நோயாளியின் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள என்.எச்.எஸ். சேவைகள் தேவைப்படலாம்.

## கோவிட் -19 தடுப்பூசிகள் எந்தளவு பாதுகாப்பானவை?

இங்கிலாந்தில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட தடுப்பூசிகள் சுயாதீன மருந்துகள் மற்றும் சுகாதார தயாரிப்புகள் ஒழுங்குமுறை நிறுவனம் (எம்.எச்.ஆர்.ஏ.) வகுத்துள்ள பாதுகாப்பு, தரம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றின் கடுமையான தரங்களை பூர்த்தி செய்துள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு கொரோனா வைரஸ் தடுப்பூசியும், மற்ற உரிமம் பெற்ற மருந்துகள் போன்றே அனைத்து மருத்துவ பரிசோதனைகள் மற்றும் பாதுகாப்பு சோதனைகளை பூர்த்தி செய்தாக வேண்டும். எம்.எச்.ஆர்.ஏ. சர்வதேச பாதுகாப்பு தரங்களைப் பின்பற்றுகிறது.

இந்த தடுப்பூசிகள் அனைத்தும் உலகம் முழுவதும் 15,000 முதல் 50,000 நபர்கள் மீது பரிசோதிக்கப்பட்டுள்ளன. அவர்களில் ஆண்கள் மற்றும் பெண்கள், வெவ்வேறு இனப் பின்னணியைச் சேர்ந்தவர்கள் மற்றும் 18-84 வயதுக்குட்பட்ட அனைத்து வயதினரும் சோதிக்கப்படுகிறார்கள். தடுப்பூசி விநியோகிக்கப்படும் போது கூட, அவை தொற்றுநோயைத் தடுப்பதில் அல்லது வைரஸை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்வதில் எவ்வளவு செயல்திறனுள்ளவை என்பதைப் பார்க்கவும், குழந்தைகளுக்கும் அதன் பயன்பாட்டை விரிவுபடுத்துவதற்காகவும், இந்த ஆய்வுகள் தொடரும்.

இதுவரை, மில்லியன் கணக்கான மக்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது மற்றும் ஒவ்வாமை எதிர்வினைகள் போன்ற கடுமையான பக்க விளைவுகள் பற்றிய அறிக்கைகள் மிக அரிதாகவே உள்ளன. நீண்ட கால சிக்கல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இங்கிலாந்தில் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளைப் பற்றி மேலும் அறிய, பார்க்கவும்:

- GOV.UK: Pfizer/BioNTech எம்.எச்.ஆர்.ஏ ஆல் அங்கீகரிக்கப்பட்ட COVID-19 க்கான தடுப்பூசி (ஆங்கிலத்தில் மட்டும்)
- GOV.UK: Oxford/AstraZeneca எம்.எச்.ஆர்.ஏ ஆல் அங்கீகரிக்கப்பட்ட COVID-19 க்கான தடுப்பூசி (ஆங்கிலத்தில் மட்டும்)
- GOV.UK: Moderna எம்.எச்.ஆர்.ஏ ஆல் அங்கீகரிக்கப்பட்ட COVID-19 க்கான தடுப்பூசி (ஆங்கிலத்தில் மட்டும்)

## கோவிட் -19 தடுப்பூசி எந்தளவு செயல்திறன் வாய்ந்தவை?

கோவிட்-19 தடுப்பூசிகளின் முதல் டோஸ் உங்களுக்கு கொரோனா வைரஸிலிருந்து நல்ல பாதுகாப்பை வழங்கிவிட வேண்டும். ஆனால் உங்களுக்கு நீண்ட கால பாதுகாப்பு வழங்குவதற்காக தடுப்பூசியின் இரண்டு டோஸ்கள் தேவை.. நீங்கள் தடுப்பூசி பெற்றிருந்தாலும் கூட கொரோனா வைரஸைப் பெறவோ அல்லது பரப்பவோ வாய்ப்பு உள்ளது. இதன் பொருள் பின்வருவதை செய்வது முக்கியம்:

- சமூக தூர வழிகாட்டலை தொடர்ந்து பின்பற்றுங்கள்
- உங்களால் முடிந்தால், மற்றவர்களிடமிருந்து விலகி இருப்பது கடினமாக உள்ள இடங்களில் உங்கள் மூக்கையும் வாயையும் மறைக்கிற மாதிரி ஏதாவது அணியுங்கள்

## கோவிட் -19 தடுப்பூசிகளின் பக்க விளைவுகள்

கோவிட்-19 தடுப்பூசியின் பெரும்பாலான பக்க விளைவுகள் லேசானவை மற்றும் 2-3 நாட்களுக்கு மேல் நீடிக்கக்கூடாது, அவை:

- ஊசி செலுத்திய இடத்தில் கையில் வலி
- களைப்பாக இருப்பது
- தலைவலி
- வலி இருப்பது போன்ற உணர்வு
- வெறும் உணர்வு அல்லது உடல்நிலை சரியில்லை
- உயர் வெப்பநிலை அல்லது காய்ச்சல்

உங்களுக்கு தேவைப்பட்டால் பாராசிட்டமால் போன்ற வலி நிவாரணி மருந்துகளை எடுத்துக் கொள்ளலாம்.

உங்களிடம் 48 மணி நேரத்திற்கும் அதிகமாக உயர் வெப்பநிலை நீடித்தால், உங்களுக்கு கொரோனா வைரஸ் அல்லது வேறு தொற்று இருக்கலாம். இருமல் மற்றும் வாசனை அல்லது சுவை இழப்பு தடுப்பூசியின் பக்க விளைவுகள் அல்ல, எனவே இந்த அறிகுறிகள் தோன்றினால் ஆன்லைனில் செல்வதன் மூலம் கொரோனா வைரஸுக்கான பரிசோதனைக்கான ஏற்பாடை செய்ய வேண்டும்.

உங்கள் அறிகுறிகள் மோசமாகிவிட்டால், 48 மணி நேரம் தாண்டிய பிறகும் நீடித்தால் அல்லது உங்களுக்கு கவலையாக இருந்தால், உங்கள் ஜி.பியை காலை 8 மணி முதல் மாலை 6.30 மணி வரை அல்லது பிற நேரங்களில் 111-ஐ அழைக்கவும் (இது அழைப்பதற்கான இலவச எண்). எல்லா கேள்விகளுக்கும் "**yes**" என்று மீண்டும் மீண்டும் பதிலளிப்பதன் மூலம் உங்கள் மொழியில் ஒரு மொழிபெயர்ப்பாளரைப் பெறலாம்.

## ஒவ்வாமை எதிர்வினைகள்

உங்களுக்கு எப்போதாவது கடுமையான ஒவ்வாமை ஏற்பட்டிருந்தால் தடுப்பூசி போடுவதற்கு முன்பு சுகாதார ஊழியர்களிடம் சொல்லுங்கள். உங்களுக்கு எப்போதாவது கடுமையான ஒவ்வாமை எதிர்வினை (அனாபிலாக்ஸிஸ் உட்பட) ஏற்பட்டிருந்தால் நீங்கள் கோவிட்-19 தடுப்பூசியை பெறக்கூடாது:

- அதே தடுப்பூசியின் முந்தைய டோஸ்
- தடுப்பூசியில் உள்ள எந்தவொரு மூலப்பொருட்களும்

கடுமையான ஒவ்வாமை எதிர்வினைகள் அரிதானவை. தடுப்பூசிக்கு எதிர்வினை இருந்தால், அது பொதுவாக உங்களுக்கு நிமிடங்களில் தெரிந்துவிடும். தடுப்பூசி மையங்களில் உள்ள பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு ஒவ்வாமை எதிர்வினைகளைச் சமாளிக்கவும் அவர்களுக்கு உடனடியாக சிகிச்சையளிக்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் மஞ்சள் அட்டை பாதுகாப்பு திட்டத்தைப் பயன்படுத்தி சந்தேகத்திற்கிடமான பக்க விளைவுகளை பற்றி நீங்கள் அறிக்கையளிக்கலாம்.

## கோவிட் -19 தடுப்பூசியின் மூலப்பொருட்கள்

அங்கீகரிக்கப்பட்ட கோவிட்-19 தடுப்பூசிகளில் எந்த விலங்கு பொருட்களும் அல்லது முட்டையும் இல்லை.

பிரிட்டிஷ் இஸ்லாமிய மருத்துவ கவுன்சில் தடுப்பூசி எடுத்துக்கலாம் என்று பரிந்துரைக்கிறது. கோவிட்-19 தடுப்பூசிகளின் பயன்பாடு தார்மீக ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று கத்தோலிக் திருச்சபை கூறியுள்ளது.

## மேலும் தகவல்

உலக மருத்துவர்கள்: கிளினிக் மற்றும் மொழிபெயர்க்கப்பட்ட கோவிட்-19 தகவல்

பிரிட்டிஷ் செஞ்சிலுவை சங்கம்: கோவிட்-19 தடுப்பூசிகள்: பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

என்.எச்.எஸ் இங்கிலாந்து: கொரோனா வைரஸ் (கோவிட் -19) தடுப்பூசி

என்.எச்.எஸ். தகவல்: கொரோனா வைரஸ் (கோவிட்-19) தடுப்பூசி

பொது சுகாதாரம் வேல்ஸ்: கோவிட்-19 தடுப்பூசி தகவல்